

கடலூர் கிழக்கு மாவட்டம், குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில், கலைஞரின் நூற்றாண்டு விழா மாபெரும் பொதுக்கூட்டம், குறிஞ்சிப்பாடியில் ஒன்றியக் கழகச் செயலாளர் வி.சிவக்குமார் தலைமையில் நடைபெற்றது. ஆர்.நாராயணசாமி, ஜி.ராம்மூர்த்தி, ஆர்.ராமர், எஸ்.சிவக்குமார், கோகிலாகுமார், கே.பி.ஆர்.பாலமுருகன், தன.தமிழ்செல்வன், எஸ்.பி.கண்ணன், எஸ்.ஆர்.கோபு, விடுதலை சு.சேகர், எஸ்.சுப்புராயலு ஆகியோர் முன்னிலை வகித்தனர். கே.வி.பி.ஜெயசங்கர் வரவேற்புரையாற்றினார். . வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினரும், மாவட்ட கழக செயலாளருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தலைமை கழக பேச்சாளர், தமிழ்நாடு பாடநூல் வாரிய தலைவர் திண்டுகல் ஐ.லியோனி, மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இந்நிகழ்வில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்துகொண்டனர். ஒன்றிய பொருளாளர் சுப்பிரமணியன் நன்றியுரையாற்றினார்.



திருப்பூர் வடக்கு மாவட்டம், அவிநாசி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருமுருகன்பூண்டி ஒன்றியம், கருவலூர் ஊராட்சி அண்ணா நகரில் ஜல் ஜீவன் திட்டத்தில் ரூ.12 இலட்சம் மதிப்பில் மேல்நிலை தொட்டி அமைக்கும் பணியினை திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர், வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.செல்வராஜ் முன்னிலையில் கழக துணை பொதுச் செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.ராசா தொடங்கி வைத்தார். இதில் மாவட்டக் கழக அவைத்தலைவர் க.நடராஜன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சரவணன் நம்பி, ஒன்றியக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.பழனிச்சாமி, மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் எல்.ஐ.சி. அவினாசியப்பன் உள்பட மாவட்ட, மாநகர, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய டெல்டா மற்றும் தென் மாவட்டங்களில்

# குறு - சிறு - நடுத்தர தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி இரு மடங்காக உயர்வு!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் தகவல்!

சென்னை,ஜூன்.29-

சென்னை, நந்தம்பாக்கத்தில் உள்ள வர்த்தக மையத்தில் 27.06.2023 அன்று நடைபெற்ற பன்னாட்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நாள் தின விழாவில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தமிழ்நாட்டில் 38 மாவட்டங்களில் சிறந்த தொழில் முனைவோர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவித்தார். மேலும் சிறப்பாக பணியாற்றிய கோவை, தென்காசி, மயிலாடுதுறை ஆகிய மாவட்ட தொழில் மைய மேலாளர்களுக்கு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்திய கூடுதல் இயக்குநர் அவர்களுக்கும், மத்திய மின்பொருள் சோதனைக் கூடத்தில் பல புதிய சோதனை வசதிகளை ஏற்படுத்தி சிறப்பாக பணியாற்றிய துணை இயக்குநருக்கும் விருதுகள் வழங்கினார்.

விழாவில், அமைச்சர் தா.மோ.அன்பரசன் பேசும் போது குறிப்பிட்டதாவது:

"கழக அரசு பொறுப்பேற்றது முதல், தமிழ் நாட்டில் அனைத்து பகுதிகளிலும் சமச்சீரான தொழில் வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற நல்ல நோக்கில் திட்டங்களுக்கான நிதியினை அனைத்து மாவட்டத்திற்கும் சமமாக பகிர்ந்து அளிக்கப்பட்டது. இதன் காரணமாக கழக அரசு பொறுப்பேற்ற இரண்டு ஆண்டுகளில் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய தென்மாவட்டங்களில் MSME நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட மானியம் ரூ. 73 கோடியே 98 லட்சத்திலிருந்து ரூ.115 கோடியே 77 லட்சமாக உயர்ந்துள்ளது. டெல்டா மாவட்டங்களில் ரூ.16 கோடியே 29 லட்சத்திலிருந்து ரூ. 39 கோடியே 92 லட்சமாக உயர்ந்து இரு மடங்கு வளர்ச்சி கண்டுள்ளது.

இந்த முயற்சியின் விளைவாக தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய தென் மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களில் 7,926



புதிய தொழில் முனைவோர்கள் உருவாக்கப்பட்டுள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனை மேலும் ஊக்குவிக்கும் விதமாக அனைத்து மாவட்டத்திலும், சிறப்பாக செயல்பட்ட தொழில் முனைவோர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

ஆண்டுக்கு 10 ஆயிரம் புதிய தொழில் முனைவோர்கள் உருவாக்க வேண்டும் என்ற இலக்கினை கொண்டு செயல்பட துவங்கிய MSME துறை கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் ரூ.660 கோடியே 20 லட்சம் மானியத்துடன் ரூ. 1,952 கோடி வங்கி கடனுதவி வழங்கப்பட்டு 23 ஆயிரத்து 188 இளைஞர்கள் புதிய தொழில் முனைவோர்களாக உருவாக்கப்பட்டு உள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். பொருளாதாரத்திலும் சமூக நீதியை நிலை நாட்டும் முதல்வர் அவர்களின் அரசு, கடந்த இரண்டு ஆண்டுகளில் 6,793 மகளிர், 2,422 பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர், 1,590 சிறுபான்மையினர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் என மொத்தம் 10 ஆயிரத்து 805 இளைஞர்களை புதிய தொழில் முனைவோர்களாக உருவாக்கி உள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சாதனைகளை நிகழ்த்த உறுதுணையாக இருந்த MSME அரசு செயலாளர், தொழில் வணிக ஆணையர், துறை உயர் அலுவலர்கள் அனைத்து மாவட்ட தொழில் மைய மேலாளர்கள், களப் பணியாளர்கள் என அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். MSME தொழில் முனைவோர்களுக்கு கடன் உதவிகளை வழங்கி சிறந்த சேவை ஆற்றிய வங்கி மேலாளர்களுக்கும் எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். MSME துறையில், தமிழகத்தை முதலிடத்திற்கு கொண்டு வர, இளைஞர்கள், துறை அலுவலர்கள், வங்கியாளர்கள் என அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்றுவோம்"

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் பேசினார்.

மேலும், இந்நிகழ்ச்சியில், குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்தான கையேடு 2.0 வினை வெளியிட்ட அமைச்சர் முன்னிலையில் தமிழ்நாடு அரசின் ஃபேம் டிஎன் நிறுவனத்திற்கும், ஷெராஃபிஸ் நாலெட்ஜ் சொல்யூஷன்ஸ் (Sherafis Knowledge Solutions) நிறுவனத்திற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் பரிமாறிக் கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலர் வி. அருண்ராய், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் திருமதி. சிஜிதாமஸ் வைத்யன், சிட்கோ மேலாண்மை இயக்குநர் திருமதி. மதுமதி மற்றும் தமிழ்நாடு குறு, சிறு தொழில் நிறுவனங்கள் சங்கத்தின் தலைவர்கள், பிரதிநிதிகள், மாவட்ட தொழில் மைய மேலாளர்கள், வங்கியாளர்கள், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### காட்டம்பட்டி கா.கந்தசாமி

### ஜூன் 30 (2018)



கழகம் தொடங்கிய நாள் முதல் உறுப்பினராகி, கழகப் பணியாற்றியவர்.

1989–ல் கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

மூன்று முறை காட்டம்பட்டி ஊராட்சி தலைவராகவும் – கிணத்துகடவு வட்டார நிலவள வங்கி தலைவராகவும் – கோவை மத்திய கூட்டுறவு வங்கி இயக்குனராவும் – மாநில கூட்டுறவு வங்கி இயக்குநராகவும் பொறுப்பு வகித்தவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

### விவசாயப் பெருமக்கள் மண் வளத்தினை அறிந்து – அதற்கேற்ப

# உரமிடும் முறையினை ஊக்கப்படுத்த 'தமிழ் மண்வளம்' இணைய முகப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஜூன் 30–**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.06.2023) தலைமைச் செயலகத்தில், வேளாண்மை உழவர் நலத் துறை சார்பில், விவசாய பெருமக்கள் தங்கள் நிலத்தில் உள்ள மண்வளத்தினை அறிந்து, அதற்கேற்ப உரமிடுவதை ஊக்குவிப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள "தமிழ் மண்வளம்" எனும் புதிய இணைய முகப்பினை (http://tnagriculture.in/mannvalam) தொடங்கி வைத்தார்.**

**வேளாண் உற்பத்தி உயர மண் வளம் அவசியம்**

பயிரின் மகசூலை உயர்த்துவதில் மண் வளம் முக்கிய பங்காற்றுகிறது. மண் வளம் என்பது, மண்ணின் தன்மை, மண்ணிலுள்ள கரிம, அமில நிலை, தழை, மணி, சாம்பல் போன்ற பேரூட்டச்சத்துக்கள், இரும்பு, மாங்கனீசு போன்ற நுண்ணூட்டச்சத்துக்களின் அளவினை குறிக்கும். மகசூலுக்கு முக்கிய காரணியாக விளங்கும் மண்ணின் வளம் குறித்து ஒவ்வொரு விவசாயியும் அறிந்து அதற்கேற்ப உரமிடுவது மிகவும் அவசியமாகும்.

**"தமிழ் மண்வளம்" இணைய முகப்பு**

விளைநிலங்களின் மண்வளத்தை மேம்படுத்தும் வகையில், கடந்த 2022-23 ஆம் ஆண்டு வேளாண்மை நிதிநிலை அறிக்கையில், "தமிழ் மண்வளம்" என்ற இணைய முகப்பு உருவாக்கப்படும் என்று வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, வேளாண்மை உழவர் நலத்துறையின் மூலம் உருவாக்கப்பட்ட "தமிழ் மண்வளம்" எனும் இணைய முகப்பு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்றையதினம் விவசாயிகளின் பயன்பாட்டிற்காக தொடங்கி வைக்கப்பட்டது.

**"தமிழ் மண்வளம்" இணைய முகப்பின் பயன்கள்**

விவசாயிகள் கணினி மூலமாகவோ அல்லது கைபேசி மூலமாகவோ http://tnagriculture.in/mannvalam/ எனும் இணையதள முகவரியில் தமிழ்மண் வளம் இணையதளத்தை அணுகலாம். இந்த இணைய முகப்பில், விவசாயிகள் தங்கள் மாவட்டம், வட்டாரம், கிராமம், தங்களது நிலத்தின் புல எண், உட்பிரிவு எண்ணை பதிவு செய்தால், உடனடியாக, மண் வளம் குறித்த அனைத்து விபரங்களும் பதிவிறக்கம் செய்யப்பட்டு, அவர்களது கைபேசியில் மண் வள அட்டையாக மின்னணு வடிவில் கிடைக்கும். இந்த இணைய முகப்பு தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், இதில் மண்டல வாரியாகவும் மாவட்டத்தில் உள்ள வட்டாரம் மற்றும் கிராமங்கள் வாரியாகவும் மண்ணின் வகைகள் தரப்பட்டுள்ளன.

மண்ணின் தன்மை, நிலத்தடி நீரின் வகைப்பாடு, உப்பின் நிலை, களர் அமில நிலை (pH), அங்ககக் கரிமம் (Organic Carbon), சுண்ணாம்புத்தன்மை (Calcareousness) போன்ற வேதியியல் குணங்கள் பற்றிய விபரங்களும், தழை, மணி, சாம்பல் சத்துக்கள் போன்ற விவரங்களும், கந்தகம், இரும்பு, மாங்கனீசு, துத்தநாகம், தாமிரம், போரான் போன்ற நுண்ணூட்டச்சத்துகளின் விவரங்களும், வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் காடுகள் சார்ந்த எவ்வகை பயிர்களை சாகுபடி செய்யலாம், தேர்ந்தெடுக்கும் பயிருக்கு எவ்வளவு உரமிட வேண்டும் போன்ற பரிந்துரைகளையும் விவசாயிகள் தெரிந்து கொள்ளலாம்.

"தமிழ் மண்வளம்" என்ற இணைய முகப்பு இந்திய அளவில் முதன் முறையாக அறிமுகப்படுத்தப்பட்டு, நாட்டிலேயே முன்னோடியாக விளங்குகிறது. இந்த இணைய முகப்பின் பயனாக, விவசாயிகள் தங்கள் நிலத்தின் மண் வளத்தை அறிந்து, அதற்கேற்ப உரமிடுவதன் மூலம் சாகுபடி செலவு குறைவதுடன், மண் வளம் காக்கப்பட்டு, பயிர் மகசூல் அதிகரிக்கும்.

இந்த நிகழ்ச்சியில், வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மை உழவர் நலத்துறைச் செயலாளர் சி.சமயமூர்த்தி, வேளாண்மை உழவர் நலத் துறை சிறப்புச் செயலாளர் டாக்டர் ஆர். நந்தகோபால், வேளாண்மை ஆணையர் டாக்டர் எல். சுப்பிரமணியன், வேளாண்மை வணிகம் மற்றும் வேளாண் விற்பனைத் துறை இயக்குநர் முனைவர் ச.நடராஜன், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கடலூர் - கீரப்பாளையம் ஒன்றியத்தில் கால்நடை மருத்துவ முகாம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தொடங்கி வைத்தார்!

கடலூர், ஜூன் 29-

தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு துறை, பால்வளத்துறை மற்றும் தமிழ்நாடு கால்நடை மருந்து அறிவியல் பல்கலைகழகம் இணைந்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, மாபெரும் சிறப்பு கால்நடை மருத்துவ முகாம், கீரப்பாளையம் ஒன்றியம், ஆயிப்பேட்டை கிராமத்தில் நடைபெற்றது.

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சரும், கடலூர் கிழக்கு மாவட்ட செயலாளரும், கழக உயர்நிலை செயல்திட்டகுழு உறுப்பினருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தொடங்கி வைத்தார். கால்நடைகளுக்கு நோய்த்தடுப்பூசி, விவசாயிகளுக்கு தீவன உற்பத்தி குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. பின்னர் அதிகளவு பால் உற்பத்தி செய்த விவசாயிகளுக்கு அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை வழங்கி பாராட்டினார்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் ம. இராஜசேகரன், கூடுதல் ஆட்சியர் வளர்ச்சி திட்ட இயக்குநர் வி.மதுபாலன், உதவி ஆட்சியர் சிதம்பரம் சுவேதா சுமன், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவ பணிகள் கூடுதல் இயக்குனர் ஆ.சுமதி, ஒன்றிய கழக செயலாளர்கள் அ.முத்துசாமி, வி.ஜி.பி. சபாநாயகம், கே.ஆர். ராயர், முத்து.பெருமாள், டி.திருமூர்த்தி, டாக்டர் எம்.மனோகர், பொதுக் குழு உறுப்பினர் கே.பி. ஆர்.பாலமுருகன் உள்ளிட்ட அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள், விவசாயிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# கோட்டூர் வடக்கில் கலைஞர் நூற்றாண்டு விழா கொடிமேடை!

## 70அடி கம்பத்தில் பூண்டி கலைவாணன் கழகக் கொடி ஏற்றினார்!

திருவாரூர், ஜூன் 30-

திருவாரூர் மாவட்டம் கோட்டூர் வடக்கு ஒன்றியத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்பு கொடிமேடையில் அமைக்கப்பட்டுள்ள 70அடி பிரமாண்ட கொடிக்கம்பத்தில் மாவட்டச்செயலாளர் பூண்டி.கலைவாணன் எம்.எல்.ஏ., கழக கொடியை ஏற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினார். ஒன்றியச் செயலாளர் பால. ஞானவேல், மாவட்ட துணைச் செயலாளர் வழக்கறிஞர் எம்.ராமகிருஷ்ணன் உள்ளிட்டோர் நிகழ்வுக்கு முன்னிலை வகித்தனர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தமிழ்நாடு முதல்வர் கழக தலைவர் தளபதி அவர்களின் வழிகாட்டுதல்களோடு திருவாரூர் மாவட்டம் முழுவதும் ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளைக்கழக, வார்டுகழகங்களில் பல்வேறு சேவைத்திட்டங்கள் எழுச்சியோடு நடைபெற்று வருகின்றன. இதன் தொடர்ச்சியாக கோட்டூர் வடக்கு ஒன்றியத்தில் திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி பிரதான சாலையில் உள்ள மழவராயநல்லூர் ஊராட்சியில் உள்ள ரத்தினவேல் நகர் பகுதியில் கழகச் செயல் மறவர் யோக பாலன் ஏற்பாட்டில் சட்டவிதிகளுக்குட்பட்டு கலைஞர் நூற்றாண்டுவிழா சிறப்பு கொடி மேடையும், 70 அடி உயர கழக கொடிக் கம்பமும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த சிறப்பு கொடி மேடையை மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தலைமை ஏற்று கழக் கொடியை ஏற்றிவைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார். எம். ராமகிருஷ்ணன், பால. ஞானவேல் உள்ளிட்டோர் விழாவிற்கு முன்னிலை வகித்தனர். ரேணுகா வெங்கடாசலம் நன்றி தெரிவித்தார். கழக நிர்வாகிகளும், பொது மக்களும் விழாவில் பங்கேற்றனர்.


தமிழ்நாடு அரசு

**பொதுப்பணித்துறை**

**கட்டடம் (க&ப) வட்டம், சேப்பாக்கம், சென்னை – 5.**

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண்: 07 கட்டட (க&ப) வட்டம்/2023–2024/நாள். 23.06.2023.**

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை : மொத்த வகை / இரு உறை முறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டட (க (ம) ப) வட்டம் சென்னை–5 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து கீழ்காணும் பணிக்காக மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றது.

| வ. எண். | பணியின் பெயர் மற்றும் முன்வைப்புத் தொகை | பணியின் தோராய மதிப்பீட்டுத் தொகை | காலம் | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் தகுந்த வகுப்பு |
|---|---|---|---|---|
| 1. | **இரு உறை முறை :** சென்னை – 15, சைதாப்பேட்டை, தாடண்டர் நகரில் 190 "சி" வகை அரசு அலுவலர்களுக்கான புதிய அடுக்குமாடி குடியிருப்பு கட்டடம் கட்டும் பணி. **முன்வைப்புத் தொகை : ரூ.50,32,000/–** | ரூ. 10043.91 இலட்சம் | 24 மாதங்கள் | வகுப்பு I A |

1. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியை அணுகவும்.
2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 08.08.2023 மாலை 03.00 மணி வரை.
3. ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 08.08.2023 மாலை 04.00 மணி.

**கண்காணிப்புப் பொறியாளர், பொபது., (முகூபொ)**
**கட்டட ( கட்டுமானம் மற்றும் பராமரிப்பு ) வட்டம்,**
**சேப்பாக்கம், சென்னை – 5.**

**செ.ம.தொ.இ/3303/ஒப்பந்தப்புள்ளி/2023**

**"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்."**



தமிழ்நாடு அரசு

**நெடுஞ்சாலைத்துறை**

**நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் வட்டம், திருநெல்வேலி**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.05/2023-2024/வ1/நாள்-26.06.2023**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர் (நெ), நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் வட்டம், திருநெல்வேலி அவர்களால் அரசு ஆணை (Ms.) எண். 7 நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (EAP.II(2))துறை, நாள். 30.01.2023 RIDF XXVIII–ன்படி நபார்டு கடனுதவியில் அனுமதிக்கப்பட்ட 2022–2023 ஆம் ஆண்டிற்கான 158 பாலங்கள் கட்டுதல் / திரும்ப கட்டுதல் திட்டத்தின் கீழ் **திருநெல்வேலி மற்றும் பரமக்குடி (நெ) நபார்டு (ம) கிராமச்சாலைகள்** கோட்டங்களுக்கான இரண்டு பால பணிகளுக்கு மூடி முத்திரையிடப்பட்ட இனவாரி விலை ஒப்பந்தப்புள்ளிகள் இருஉறைமுறை இணைய வழியில் மட்டுமே 01.08.2023 **அன்று 15.00 மணி வரை** வரவேற்கப்படுகிறது.

பணியின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்பு தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள், முக்கிய நிகழ்வுகளின் நேரமும் தேதியும் மற்றும் அனைத்து இதர விபரங்களும் **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் 07.07.2023 **முதல்** தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் ஏற்படின் அவைகள் அனைத்தும் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ/3304/ஒப்பந்தப்புள்ளி/2023

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ)**
**நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் வட்டம், திருநெல்வேலி-2**

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"